**இலங்கையின் எம்.எஸ்.எம்.ஈ.க்கள் நிதியை பெறுவதற்காக யுஎஸ்எயிட் தனியார் வங்கிகளுடன் இணைகின்றது**

அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்திக்கான முகவர் நிலையம் (யுஎஸ்எயிட்), யுஸ்எயிட் அபிவிருத்தி கடன் அதிகாரசபை, ஹட்டன் நஷனல் வங்கி, சம்பத் வங்கி ஆகியன இலங்கையில் உள்ள தனியார், நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்துறையினருக்கு 9 மில்லியன் அமெரிக்க டொலர் உள்ளூர் நிதியை வழங்குவதற்கான புதிய ஒத்துழைப்பு திட்டத்தினை ஆரம்பித்துள்ளன. இந்த முக்கிய கடன்பெறுவோர் குழுக்களுக்கு போதியளவு நிதியுதவி இல்லாதமைக்கு இந்த ஏழு வருடகால திட்டம் தீர்வு காண உதவும்.

இலங்கையில் உள்ள இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் சுயவேலைவாய்ப்பை வலுப்படுத்துவதற்கான யூஎஸ்எயிடின் யூலீட் நிகழ்ச்சி திட்டம் இதற்கு மேலும் ஆதரவு வழங்கி இதனை பலப்படுத்தும்.

கொழும்பில் இடம்பெற்ற இதற்கான உடன்படிக்கையில் கைச்சாத்திடும் நிகழ்வு இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கான அமெரிக்காவின் அர்ப்பணிப்பை மீண்டும் வெளிப்படுத்தியுள்ளது. மேலும், இது இலங்கைக்கான யுஎஸ்எயிடின் பரந்துபட்ட உதவியின் ஒரு பகுதியாகும். யுஎஸ்எயிடில் உள்ள நாங்கள் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு முக்கியமான துறைகளுக்கு தனியார் துறையின் கொடுப்பனவுகளை ஊக்குவிப்பது குறித்து பெருமையடைகின்றோம் என யுஎஸ்எயிடின் இலங்கைக்கான இயக்குநர் ரீட் ஏய்சிலமான் தெரிவித்தார். கடன்களை பெறுவதற்கான வாய்ப்புகளை அதிகரிப்பதற்கும் இளம் தொழில் முயற்சியாளர்கள் தங்கள் வாழ்க்கையை முன்னேற்றகரமாதாக்குவதற்கும் சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்கள் தங்கள் பிரதேசங்களில் பொருளாதார அபிவிருத்தியை அதிகரிப்பதற்கும் உதவும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த திட்டமானது இலங்கையின் தனியார் துறையினர் மற்றும் இளம் முயற்சியாளர்கள் முதலீடுகளை பெறுவதற்கும், தங்களது வர்த்தக நடவடிக்கைகளை விஸ்தரிப்பதற்கும் இறுதியாக அதிகளவு வேலைவாய்ப்புகளை அதிகரிப்பதற்கும் உதவுவதை நோக்கிய முக்கியமான நடவடிக்கையாகும். இந்த உடன்படிக்கை புதிய கண்டுபிடிப்புகளை ஊக்குவிப்பதற்கும் முதலீடுகளை ஊக்குவிப்பதற்கும் இலங்கையின் உதவிகளை அதிகம் பெறாத எம்.எஸ்.எம்.ஈ. மற்றும் ஆரம்பகட்ட பிரிவினருக்கு முக்கிய வளங்களை வழங்குவதை ஊக்குவிக்கும்.

எம்.எஸ்.எம்.ஈ. துறையில் அபிவிருத்தியையும் வளர்ச்சியையும் ஊக்குவிக்கும் எச்.என்.பி. வங்கியின் பாரம்பரியத்தை கருத்தில்கொள்ளும்போது நிதிக்கான பெருமளவு சாத்தியம் குறித்தும் அதற்கான தேவை குறித்தும் நாங்கள் உணர்ந்துள்ளோம் என தெரிவித்துள்ள எச்.என்.பி. வங்கியின் பிரதி பொதுமுகாமையாளர் ஜூட் பெர்ணான்டோ, எச்.என்.பி. வங்கி, சம்பத் வங்கி மற்றும் யூஎஸ்எயிட் ஆகியவற்றுக்கு இடையிலான இந்த உடன்படிக்கை இளம் இலங்கையர்களுக்கு பொருளாதார வாய்ப்புகளை அதிகரிப்பதற்கான முக்கிய நடவடிக்கையை குறிக்கின்றது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

எச்.என்.பி. மற்றும் சம்பத் வங்கியின் தந்திரோபாயங்கள் இந்த இணைந்த செயற்பாட்டின் நோக்கத்துடன் நன்கு பொருந்துகின்றன. இரு வங்கிகளும் மக்களை சென்றடைவது மற்றும் அனுபவம் ஆகியவற்றில் பலத்த திறனை கொண்டுள்ளன. மேலும், அவை எம்.எஸ்.எம்.ஈ. மற்றும் கொடுப்பனவுகளை ஆரம்பிப்பது ஆகிய விடயங்களில் அதிகரிப்பை மேற்கொள்வதற்கான சிறந்தநிலையில் உள்ளன.

சம்பத் வங்கியை சேர்ந்த நாங்கள் அனைத்து மட்டங்களிலும் தொழில்துறை வளர்ச்சி அவசியம் என கருதுகின்றோம் என தெரிவித்துள்ள சம்பத் வங்கியின் சிரேஷ்ட பிரதி முகாமைத்துவ பணிப்பாளர் தாரக்க ரன்வல, அபிவிருத்தி நிதி என்பது எங்கள் முக்கிய பகுதியாக உள்ளது

எனவும் தெரிவித்துள்ளார். புதிய தொழில்முயற்சியாளர்களுக்கும் அவசியமான மூலதனத்தை வழங்கும் இந்த திட்டத்தை நாங்கள் வரவேற்கின்றோம், இது எங்களுடைய தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி முயற்சியுடன் நன்கு பொருந்திபோகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அரசாங்கத்தின் முன்னுரிமைகளுகென உள்ளூர் நிதிகளை திரட்டுவதற்கு முதலீட்டு மாற்றுவழிகளை வடிவமைப்பதற்கும் வழங்குவதற்கும் முதலீட்டாளர்கள், உள்ளூர் நிதி அமைப்புகள், மற்றும் அபிவிருத்தி அமைப்புகளுடன் யுஎஸ்எயிட் இன் அபிவிருத்தி கடன் அதிகாரசபை பணியாற்றுகிறது. 76 நாடுகளில் 558 திட்டங்களுக்காக 5.4 பில்லியன் டொலர்களை திரட்டுவதற்கு இந்த அபிவிருத்தி கடன் அதிகாரசபை இன்று வரை உதவியுள்ளது. யுஎஸ்எயிட் பற்றிய மேலதிக தகவல்களுக்கு கீழ்வரும் இணைய முகவரிக்கு பிரவேசிக்கவும்: http://www.usaid.gov/dca

யுஎஸ்எயிட் அமெரிக்காவின் முக்கிய அபிவிருத்தி முகவர் அமைப்பாகும். 1956 முதல் இலங்கை அரசாங்கத்திற்கு மனிதாபிமான மற்றும் அபிவிருத்தி உதவியாக அமெரிக்க அரசாங்கம் 2 பில்லியன் டொலரிற்கும் அதிகமான தொகையை வழங்கியுள்ளது. மேலதிக தகவல்களுக்கு https://www.usaid.gov/sri-lanka என்ற இணைய முகவரிக்கு பிரவேசிக்கவும்.